RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s99

# உழுகுடி மக்களின் வாழ்வியல் சிக்கல்களும், பண்பாடும்

செ. வீரலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தேவாங்கா கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை, விருதுநகர்-626101, தமிழ்நாடு, இந்தியா.

# Complications of Life and Culture of Farmers

S. Veeralakshmi [a, *]

[a] Department of Tamil, Devangar Arts College, Aruppukkottai, Virudhunagar-626101, Tamil Nadu, India

* Corresponding Author: veeralakshmisenniah@1gmail.com

Received : 01-08-2021
Revised : 19-05-2022
Accepted : 25-05-2022
Published : 28-07-2022

**ABSTRACT**

Various studies have been carried out in the field of Tamil studies on ancient Tamil agriculture and technology. It is natural for today's studies to embed postmodernism and Marxist principles in any theory. In this way, this article has studied the generation of the raw material (land) for the agriculture of farmers, a gradual transition of civilizational development, statehood, proprietary, labour of the farmers due to water distribution doctrines of ruling class, revolts of the farmers when they were subjected to exploitation, Sangam literature, inscriptional evidences, similar issues that are reflected in the contemporary modern literature based on the studies of the scholars, vocational problems of contemporary farmers comparatively in addition to the research of the culture of the people who adhere to the culture built by the society.

**Keywords:** Farmers Life, Agriculture, Inscriptional Evidences, Sangam Literature

## முன்னுரை

உணவு, உடை, இருப்பிடம் எனும் மனிதனின் அடிப்படைத் தேவைகளின் தேடலில், உணவுத்தேவை மனிதனை குழு வாழ்க்கை, இனகுழுவாழ்க்கை, சமூகம் எனும் படிநிலை கட்டமைப்புக்குள் கொண்டு வந்தது. இனக்குழுச் சமூகத்தில் திணைக்குடிகளாக வாழதலைப்பட்ட போது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய நாகரிகத்தின் வளர்ச்சியாகக் கண்டுபிடிக்கப்பட்ட வேளாண்மைத் தொழில் பொதுவுடைமையாக கருதப்பட்டு அனைத்து மக்களின் உணவுத் தேவையைப் நிறைவு செய்தது. அரசு என்னும் நிறுவனம் தோற்றம் கொண்ட பின்னர் போர்ச்சூழல், வாணிப நோக்கு , உழைக்கும் வர்க்கம், முதலாளித்துவம் முதலான சிந்தனைகள் மேலோங்கிய போது வேளாண் நிலத்தைக் காத்தல், பயிர் உற்பத்தி செய்தல் போன்றவை உழுகுடி மக்களின் உழைப்பிற்கு பெரும் சவாலாக அமைந்தன. இச்சவால்களுக்கிடையில் மக்களின் பசிப்பிணி நோய் நீக்கும் அருமருந்தாகிய உணவுப்பொருட்களை உற்பத்தி செய்து உயிர்காக்கும் இறையாகத் திகழும் உழவர்களின் சிறப்பை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## திணைக்குடிகளின் காட்டெரிப்பு வேளாண்மை

“சித்திர சோலைகளே -உமை நன்கு

திருத்த இப்பாரினிலே -முன்னர்

எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ"

என்ற பாவேந்தர், கருத்திற்கேற்ப மக்கள் இனக்குழுவாக நாடோடிய வாழ்க்கை, ஓரிடத்தில் நிலைத்த சமூக வாழ்க்கை வாழ துவங்கிய போது வேளாண்மைத் தொழில் தோற்றம் பெற தங்கள் உழைப்பை மூலதனமாகக் கொடுத்துள்ளனர் குறிஞ்சி நிலத்து மலைக் குறவர்கள் கேழல்கள், கிழங்குகளை அகழ்ந்த பகுதியில் மீண்டும் பயிர் வளர்ந்ததை கூர்ந்து நோக்கி, அப்பகுதியை தங்களின் பயிர்த்தொழிலுக்குரிய உழுநிலமாகத் தேர்ந்துள்ளனர் (Bharathidasan, 2010). இதனை,

"கேழல் உழுதெனக் கிளர்ந்த எருவை

விளைந்த செருவின் தோன்றும் நாடன்".

என்ற பாடல் அடிகளும்,

கொழுங் கிழங்கு மிளரக்கிண்டி, கிளையொடு

கடுங்கண் கேழல் உழுத பூமி

நல்நாள் வருபதம் நோக்கி , குறவர்

உழாஅது வித்திய பருஉக்"

என்ற பாடல் அடிகளும் சுட்டுகின்றன (Subramaniyan, 2007).

ஆநிரைகளை மேய்த்த முல்லை நிலக்குடிகள் ஆநிரைகளின் உணவுத்தேவை. தங்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய வேளாண்மையைத் தேர்ந்துள்ளனர். இவர்கள் செய்த வேளாண்மை என்பது உணவு உற்பத்தியாகக் கருதப்பட்டள்ளது. இவ்வுணவு உற்பத்திக்கு, பெரும் நிலப்பரப்பு தேவைப்பட்ட போது அவர்கள் காடுகளை அழித்து அப்பரப்பை உண்டாக்கியுள்ளனர். இதனை, "வேளாண் நிலத்தை உருவாக்க காட்டை அழித்தல் என்பது முதற்கட்டமான அடிப்படை பணி. இப்பணிக்கு எரிபுனச் சாகுபடி அனுபவங்கள் துணை செய்திருக்கலாம். எனவே எரிபுனச் சாகுபடி முறை என்பது பிற்காலத்தில் வேளாண் நிலத்தில் உருவாக்கும் தொழில் நுட்பமாக மாற்றியிருக்க வேண்டும் (Stephen, 2017)."பண்டைய தமிழகத்தில், குறிப்பாக முல்லைத் திணையில் தோன்றிய வேளாண்மை மலைச் சரிவு விவசாயம்((Terrace Cultivation) அல்லது எரிபுன விவசாயம் அல்லது இடம் பெயரும் வேளாண்மை (Shifting Cultivation) எனக் குறிப்பிடலாம்" (Baktavatchala Bharathi, 2014). என்ற கருத்தின் வழி காட்டை அழித்து வேளாண் வயல்களை உருவாக்கியதைக் காணமுடிகிறது. மேலும், எரிந்த மரங்களின் சாம்பல் உரமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"கரிபுனம் மயங்கிய அகன் கண் கொல்லை"

என்ற புறப்பாடலும், காடுகள் எரிப்பு வேளாண்மையைச் சுட்டுகின்றது (Subramaniyan, 2007). வேளாண்மையின் பெரு நிலப்பரப்பான மருத நிலம், வயல் சார்ந்த பெருவளப்பகுதியாக உருபெற்று உழுகருவிகள், உழுதல் தொழில் நுட்பம் கொண்டு, உழவர் சமுதாயத்தையும், உழவர், உழத்தியர் எனும் திணைக்குடிகளையும் உருவாக்கின. திணைக்குடி சமுதாயத்திற்குப் பிந்தைய நிலையான அரசுடைமைக் காலத்தில் கரிகால் சோழன் தன் அரசுடைமையைக் காக்கும் பொருட்டு செய்த போருக்குப் பின் , காடுகளை அழித்து மருத நிலப்பரப்பை உண்டாக்கி, உழுதொழிலுக்குரிய நீர் மேலாண்மையைக் கடைபிடித்ததை வரலாற்றுச் சான்றுகளும், சங்கஇலக்கியங்களும் பகர்கின்றன.

"காடு கொன்று நாடு ஆக்கி,

குளம் தொட்டு வளம் பெருக்கி,

பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி

என்ற அடிகளுக்கு புதிய தலைநகரை உருவாக்கி, அதில் தம் ஆணையை ஏற்று ஒழுகுவாரைக் குடியமர்த்தி, நாட்டின் காவலையும் மிகுதியாக்கினான்" என்று உரையாசியர்கள் பொருள் கூறுகிறார்கள் (Subramaniyan, 2007).

புலம் பெயர் மக்களான நாயக்கர்களின் வாழ்க்கையைக் கூறும் கி.ராவின் 'கோபல்ல கிராமம்' புதினத்தில் மங்கத்தாயார் கூற்றாக நிகழும் கதையில் வேளாண்மைக்குரிய நிலப்பரப்பைப் பாட்டியின் யோசனைப் படி" அந்த காட்டில் அவர்கள் உண்டாக்கிய தீவு முதலில் அவர்கள் நினைத்தது போல் சிறியதாக அமையவில்லை. நிறைய்ய நிலம் வேணும் என்ற விவசாயிகளுக்கே உண்டான பேராசையால் ரொம்பப் பொரியதாக அமைந்துவிட்டது. நாலுபக்கமும் பாதையை- இடைவெளியை- நல்ல அகலமாகவே உண்டாக்கியிருந்தார்கள் (Rajanarayanan, 2016). "ஏ வனதேவதைகளே, காத்துக் கருப்புகளே, இந்தக் காரியத்துக்கு எந்த வித விக்னமும் வாராமல் நீங்கதான் எங்களுக்குத் துணை செய்யணும்" என்று காட்டெரிப்பு முறையில் அவர்கள் அமைத்ததையும், அதற்கு தெய்வம் துணை செய்யவேண்டும் என்ற தெய்வ வழிபாட்டு நம்பிக்கையையும் காணமுடிகிறது (Rajanarayanan, 2016).

மேற்கூறிய கூற்றுகள் வழி திணைக்குடி வாழ்விலும், புலம் பெயர் வாழ்விலும் உணவு , உணவை உண்டாக்குவதான உழைப்பு எனும் நோக்கில் நிகழ்ந்த, வேளாண் நிலப்பரப்பை உண்டாக்குவதான காட்டெரிப்பு, மக்களின் பொதுவுடைமைக் கோட்பாட்டை புலப்படுத்தகின்றது. பொதுவுடைமை நிலவிய காலத்தில் உழுநிலத்திற்காகவும், உணவிற்காகவும் மக்களிடையே எந்தவிதப் போரும் நிகழவில்லை. சு.வெங்கடேசன் அவர்களின் 'வேள்பாரி' புதினத்தில் திணைக்குடிகளின் வாழ்வியல் விழுமியங்களையும், பாரியின் கொடை உள்ளத்தை புகழுமிடத்திலும் இப்பொதுவுடைமை தத்துவத்தை காணமுடிகிறது. ஆனால் அரசர்களின் காட்டெரிப்பு நிலை என்பது முதலாளித்து கோட்பாட்டையும் அதிகாரத்துவத்தையும் காட்டுவதாகவே அமைகின்றன. மேலும் அன்று அடிப்படைத் தேவைகளுக்காக நிகழ்த்தப்பட்ட காட்டெரிப்பும், இன்று நவீன வாழ்வியலின் ஆடம்பரத்திற்காக எட்டுவழிச்சாலை, அடுக்குமாடி குடியிருப்பு, தொழிற்சாலைக் கட்டுமானம் என்பதற்காக நிகழ்த்தப்படும் காட்டெரிப்பும், வேளாண் நிலங்கள் கையகப்படுத்துதல் என்பதும், மக்களின் வாழ்விற்கு மட்டுமின்றி. இயற்கைக்கும் கேடுவிளைவிப்பதாகவே அமைகின்றன.

## உழுகுடி மக்களின் சிக்கலும், கிளர்ச்சியும்

சமுதாயத் தேவைகளை தன்நிறைவு செய்வதான புறக்கோட்பாட்டு அடிப்படையிலான ஆநிரை கவர்தல், வீரத்துடன் சார்த்தி பேசப்பட்டன. அதுவே நாகரிக வளர்ச்சியின் நீட்சியில் மன்னர்களின் மண்ணாசையாக வலுப்பெற்று போது, நாட்டு எல்லைகளை விரிவுபடுத்தும் போர்கள், பண்டை தமிழ்ச் சமூகத்தில் மறமாண்பாகச் கருதப்பெற்றிருப்பினும், போருக்குப் பிந்தைய அழிவுகள் மக்கள் வாழ்வில் சிக்கல்களை விளைவித்திருக்கும். சோழப்பேரரசர் கரிகால் சோழனின் படையெடுப்பின் போது நிகழும் அழிவுகளை எடுத்துரைக்கும் பட்டினப்பாலையில்,

"..........தண் பணை எடுப்பி,

வெண் பூங் கரும்பொடு செந்நெல் நீடி

மா இதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கி,

கராஅம் கலித்த கண்அகன் பொய்கை." (Subramaniyan, 2007)

என்ற அடிகள் மூலம் அவன் மருதநிலக்குடிகளைக் குடிப்பெயர்ந்து ஓடும்படிச் செய்தனன். எனும் குறிப்பும்,

"..............பெருந்தண்பணை

குரூஉக் கொடிய எரி மேய

நாடு எனும் பேர் காடு ஆக,

ஆ சேந்த வழி மா சேப்ப,

ஊர் இருந்த வழி பாழ் ஆக."

என்ற பாடல் அடிகள் மூலம் என்றும் வளம் குன்றாத மருத நிலங்களில் தீக் கொழுந்துகள் பரவும்படி எரியுட்டினான் (Subramaniyan, 2007). நாடு என்ற பெயர் நீங்கி காடு என்னும் பெயர் பொருந்துமாறு செய்தான் பாண்டிய நெடுஞ்செழியன் எனும் குறிப்பின் வழி மக்களின் துயரத்தை அறியமுடிகிறது. காட்டை அழித்து வயல்வெளியை உண்டாக்கிய அரசன், பிறிதொரு நாட்டில் மருதநிலக்குடிகளை தன்நிலம் விட்டு குடிபெயர்ந்து ஓடச்செய்தான் என்பது இங்கு அரசியல் முரணைக் காட்டுகின்றன. மேலும் அரசர்களின் இப்போர் முறை, சமூகக்கட்டமைப்பில் நிகழ்ந்த பல்வேறு மாற்றங்களுக்கு அடிகோலியுள்ளது. முக்கியமாக வருணாசிரம சிந்தனை தன்னுடைய, ஆணிவேர்களை நிலத்தில் நன்கு வேரூன்ற செய்த போது, வேளாண் நிலத்தை காக்கவும், அதற்கான வரிச்சிக்கலில் இருந்து விடுபடவும், உழுகுடி மக்கள் போராட்டங்களை நிகழ்த்த வேண்டிய சூழலுக்கு ஆட்பட்டுள்ளனர். காவிரி ஆற்றின் நீர்வளத்தை தன்னகத்தே கொண்ட சோழநாடு, 'சோழ நாடு சோறுடைத்து' எனும் முதுமொழியைப் பெற்றிருப்பினும், பிற்காலச்சோழர்களின் ஆட்சியில் நிலவிய குழப்பங்கள், தனிச்சொத்துரிமை மீதான சிந்தனைகள், நிலவுடைமையாளர்களின் அதிகாரம் போன்றவை அக்காலச் சூழலில் சாமானிய மக்களின் எழுச்சிக்குக் காரணமாகத் திகழ்ந்துள்ளது. நொபொரு கராஷிமா அவர்களின் சாதிய உருவாக்கம் குறித்த ஆய்வுகளின் வழி பிராமணர், வெள்ளாளர், உழுகுடிகள், வடங்கை. இடங்கைப்பிரிவினர், தொழிலாளர்களுக்கு இடையே நிகழ்ந்த பூசல்கள், அதற்கான சமாதான உடன்படிக்கைகள், சித்திரமேழி பெரிய நாடு எனும் உழவர் அமைப்புகள் குறித்ததான செய்திகள் உழவர்களின் சிக்கல்களைப் புலப்படுத்துகின்றன. "பார்ப்பன நிலச் சொந்தக்காரர்களுக்கும் வெள்ளாள, உழவர்களுக்கும் இடையே வெள்ளாமைக்கு வழங்கும் குடிமைப் பணம் பற்றிய உடன்பாட்டைக் குறிப்பிடும் மன்னார்குடி கல்வெட்டு, இந்த உடன்பாட்டை மீறுவோர் நாட்டுத் துரோகியும் குருத்துரோகியும் (கிராமத் துரோகியும்)" ஆவார் என்று எச்சரித்துள்ளது."

"நில உரிமையாளராக இருந்த ஊராரே உழுது பயிரிட்டு வந்தால் ஊரச்சமூகம் அடிப்படையில் படிநிலைச் சமூகமாக ஆகவில்லை (Baktavatchala Bharathi, 2015). முற்சோழர் காலத்தில் வெள்ளான் ஊர்கள் சமூக உடைமையைக் கொண்டிருந்த பிற்சோழர் காலத்தில் அவர்கள் தனியார் உடைமையைக் கொண்டவையாக மாறிவிட்டன. நிலவுடைமைக்காரர்கள் தோன்றத் தொடங்கினார். பலர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊர்களில் சொத்துக்கள் கொண்ட நிலப்பிரபுக்களாக மாற்றமடைந்தனர் (Baktavatchala Bharathi, 2015). என்ற செய்தியும், "உழுகுடிகள், தொழிலாளிகள் ஆகியோரிடம் முதலில் இருந்த மன உளைச்சலையும் பின்பு ஏற்பட்ட துணிச்சலையும் தெளிவாகச் சித்தரிக்கிறது. வரிக்கொடுமையால் மிகவும் நசுங்கிய இப்பகுதிக் குடிகள் தங்கள் மண்டலமான சோழ மண்டலம் விட்டு வெளியில் ஒடிப்போகும் அளவுக்கு மனஉறுதியை இழந்தார்கள்". என்ற கூற்றுகளும், நிலவுடைமையாளராகக் கருதப்பட்டவர்களின் பிற்காலத்தியப் பண்ணையாளர், கங்காணிகள் என மாறி சாமானிய மக்களின் உழைப்பை சுரண்டுபாவர்களாகவே திகழ்ந்துள்ளனர். கங்காணிகளின் கொடுமைக்கு ஆட்பட்ட துயரத்தை மலேசியா, பர்மா, இலங்கை நாடுகளுக்கு புலம்பெயர்ந்த மக்களின் வாய்மொழி இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இக்கொடுமை ஒருபுறம் நிகழ்ந்தாலும், மறுபுறம் தங்களின் உழுதொழிலையும், உற்பத்தியையும் உலகிற்கு நல்கும் பணியைச் செய்யும் பண்பாளர்களாகவே இருந்துள்ளனர். அதனாலேயே சங்க இலக்கியங்களில் உழவுத்தொழிலின் சிறப்புகள், மேன்மைகள் பலபட புகழ்ந்து பேசப்பட்டுள்ளன.

## வேளாளன் பண்பாடு

உழுதுண்பாரும், உழுவித்துண்பாருமாகிய உழவர்கள் "வேளாளன்" என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். அதனை அடியொற்றியே வேளாண், வேளாண்மையெனும் சொற்கள் பல்வேறு பொருள்பட இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன.

"வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்"

'வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தும்" (Elampuranar, 2004)

எனக் கொடைப்பொருளிலும்,

"வேளாண் வாயில் வேட்பக் கூறி

என விருந்தோம்பல் பொருளிலும்,

"வேளாண்மை வேள்வியோடு ஒப்ப உள"

என ஈகைப் பொருளிலும், குறிப்பிட்டுள்ளனர் (Subramaniyan, 2007). இச்சிறப்புக் கருதியே மருதநில முதன்மைத் தொழிலாகிய உழவைத் தலைமை தொழிலாக சங்க இலக்கியங்கள் போற்றுகின்றன. "பொருபகை தரூஉங் கொற்றமும் உழுபடை

ஊன்றசால் மருங்கின் ஈன்றதன் பயனே

எனும் அடிகளில் உழவர்களின் உழுபடையை ஆதரமாகக் கொண்டு மன்னர்களின் செங்கோல் நடைபெற்றதை அறியமுடிகிறது (Subramaniyan, 2007). மேலும் உழைப்பு ஒன்றை மட்டுமே பொருள் எனக் கொண்டு, பசியறியாத வளத்தையுடையவர் மருதநிலக்குடிகள் என்பதை,

"தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை

மல்லல் பேரூர் மடியின் மடியா

எனப் பெரும்பாணாற்றுப்படை சுட்டுகிறது (Subramaniyan, 2007). ஐவனநெல்லை விளைத்து, நெல் உணவுடன் நண்டினையும், விருந்தினர்களுக்கு முள்ளில்லாத இறைச்சி உணவை விருந்தாகப் படைத்து சிறப்பித்துள்ளனர். செழுமை நிறைந்த வேளாண்மையில், சிலபொழுது வறுமையும் தன்முகத்தைப் பதிவு செய்துள்ளது. எத்தகைய வறுமை நேரினும் வேளாண் குடிகள் விதைகளை உணவாகவோ, வாணிப பொருளாகவோ மாற்றம் செய்யும் சிந்தனை கொள்ளாதவர்கள். அச்சிந்தையை வறுமை வென்று காட்டியுள்ளது. இதற்குச்சான்றாக,

"வீழ்குடி உழவன் வித்துஉண் டாஅங்கு"

எனும் புறப்பாடல் அமைகிறது (Subramaniyan, 2007). இருப்பினும்,

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை."

எனும் வள்ளுவன் மொழிப்போல், இயற்கை மற்றும் செயற்கை காரணிகளினால் பல்வேறு இன்னல்களுக்கு உட்பட்டாலும் தங்களின் உழைப்பை பண்டு தொட்டு, இன்று வரை செய்துவருகின்றனர்.

## சமகால சிக்கல்கள்

பண்டுதொட்டு பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிய உழவர்கள், உயிர் காக்கும் அருமருந்தாகிய உணவை உற்பத்தி செய்வதற்கு, இயற்கைப் பொருட்களையே உரமாகப் பயன்படுத்தியுள்ளனர். உலர்ந்த மரங்களின் சருகுகள், மலர்கள், எரு போன்றவற்றையே பயன்படுத்தியுள்ளனர். காஞ்சிமலரின் மகரந்தத் துகள்களை உரமாக இட்டதை.

"உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்

காஞ்சி ஊரன்" (Subramaniyan, 2007)

என்று குறுந்தொகையும்,

"காஞ்சித் தாது உக்கன்ன தாது எரு மன்றத்து (Subramaniyan, 2007)

என்று கலித்தொகையும்,

"தாது எருத் ததைந்த" என்று மலைப்படுகடாமும்.

"இடுமுள் வேலி எருப்படு வரைப்பன்"

என்று பெரும்பாணாற்றுப்படையும், சுட்டுகின்றன (Subramaniyan, 2007). தமிழ்மொழிக்கும், அதன் பண்பாட்டிற்கும் நீண்ட நெடிய மரபு உள்ளதோ, அதனைப் போன்றே, அம்மரபின் வழிவந்த உழவுத்தொழிலுக்கும், அதன் தொழில் நுட்பத்திறகும் நீண்ட நெடிய மரபு உண்டு. இம்மரபு இன்று பின்பற்றப்படுவது சாத்திய மற்றதாகவே உள்ளது. சமகாலத் தொழில் நுட்ப வளர்ச்சியில் தன்னிறைவு பெறல் எனும் சொல்லாடலுக்காக, இயற்கையின் உன்னதத்தையும் அதன் பயன்களையும் மறந்து செயற்கையை அத்தொழில் கையில் எடுத்துள்ளது. மக்களின் உணவுத்தேவையை நிறைவு செய்யும் பொருட்டு பசுமைப்புரட்சி எனும் சொல்கொண்டு "வேளாண்மைத்துறை" என்ற பெயர்பெற்று செயற்கை உரங்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்திப் பெருக்கத்தில் வளமை ஏறப்பட்டிருந்தாலும், அப்பொருளை வாரிவழங்கிய மண் வளத்தை இழந்து நிற்பது வருத்தத்திற்குரிய செயலாக உள்ளன. அதனினும் சிறு ஆறுதலுக்குரிய செயல்பாடாக தற்போது " இயற்கைக் வேளாண்மை", "இயற்கையை காத்தல்" என்ற கோட்பாட்டை சில அமைப்புகள் கருத்தில் கொண்டு மரபுசார் வேளாண்மைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம், பண்டை தொன்மை மரபு காக்கப்படும் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது. நம்பிக்கையே சிலபோது மனித இயக்கத்திற்கு ஊன்றுகோலாக அமைகிறது. அந்நம்பிக்கைபாற்பட்ட செயல்கள் வேளாண்மையிலும் பின்பற்றப்படுகின்றன.

## வேளாண் சடங்குகள்

பஞ்ச பூதங்களில் ஒரு கூறாகிய உற்பத்தி உருவாக்கமான நிலத்தை முதற்பொருளாகக் கொண்டு செய்யப்படும் வேளாண் தொழிலில் பண்டை சமூகத்தின் நம்பிக்கையையொட்டி எழுந்த சடங்குகள் தெய்வ வழிபாடாக உருமாற்றம் பெற்று, இன்றும் சில மாற்றங்களுடன் பின்பற்றப்படுகின்றன. சடங்குகள் குறித்த சிந்தனைகள் சமூகப்படி நிலையில் பல்வேறு நிலைகளில் பின்பற்றப்படுகின்றன. நிகழ்த்துதல் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சடங்கு குறித்து "சடங்கு என்பது நிகழ்த்தப்படுவது, அழகியல் வெளிப்பாட்டுடன் ஓர் அதீத கருத்துப் புலப்பாட்டினையும் வெளிப்படுத்துவது." என்று கூறுகிறார் (Baktavatchala Bharathi, 2015). மேலும் சடங்கென்பது ஒன்றைப் பெறுவதற்காக மற்றொன்றை கொடுப்பதாக அமைகிறது. "பண்டைய மக்கள் சடங்காச்சாரங்களை வாழ்க்கையில் நலன்களைப் பெற மிக அவசியமென கருதினர். மழை பெய்யவும், பயிர் வளரவும், காய்-கிழங்குகள் கிடைக்கவும், புயல் போன்ற இயற்கை விபத்துகள் நேராமல் இருக்கவும் நிகழ்த்தினர்" என்கிறார் (Vaanamaamalai, 1976). இக்கூற்றிற்கேற்ப தெய்வ வழிபாட்டுடன் சோர்ந்து அல்லது தொழில் சார்ந்த நம்பிக்கையுடன் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. மழை வளமற்ற மானாவாரி நிலப்பகுதியில் இச்சடங்குகள் அதீத நம்பிக்கையுடன் இன்றும் பின்பற்றப்படுகிறது. உழவுக்கு முதல் ஆதாரமாகிய மழை வேண்டி வழிபடுதல் தொடக்க வழிபாடாக உள்ளது. 'சித்திரை உழவு பத்தரை மாதத் தங்கம்' எனும் பழமொழிக்கேற்ப சித்திரை மாத கோடை மழையின் போது ஏர்ப்புட்டி, எருயிட்டு நிலத்தைப் பண்படுத்தத் தொடங்குகின்றனர். வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப என்ற கருத்திற்கேற்ப குலதெய்வ வழிபாட்டையும், சமய நம்பிக்கைகேற்ப பிள்ளையாரையும் வழிபடுகின்றனர். புராணக்கதைகளில் பிள்ளையார் பிறப்பு குறித்து பல்வேறு கருத்துக்கள் வழங்கப்படினும், வேளாண் மக்களிடம் உழவின் போது பிறந்தவர் என்பதை,

"முச்சாணி பிள்ளையாரே

சப்பாணி பிள்ளையாரே

..............................

உழவிலே மொளைச்சவரே

ஊரைக்காக்கம் பிள்ளையாரே"

என்றப்பாடல் விளக்குகிறது (Subramaniyan, 2007). செழிப்புக்கும், வளமைக்கும் உரியவராக ஆண் தெய்வமான பிள்ளையார் உழவில் முதன்மைப் படுத்தப்படுபவாராக உள்ளர். மழைக்கடவுளாகிய வருணன் வழிபாடும். சங்ககாலம் தொட்டு வழக்கிலுள்ளது என்பதை,

“வானம் மின்னு வசிவுபொழிய ஆனாது

இட்ட எல்லாம் பெட்டாங்கு விளைய

ஆகல் இருவிசும்பின் ஆஅல்போல

………………………………….

நீலத்து அன்ன விதைப்பன மருகில்”

என்ற மலைபடுகடாம் பாடல் எடுத்துரைக்கிறது (Subramaniyan, 2007). மழை நீர் என்பது அனைத்து தொழில்களுக்கும் தேவைப்படுவதுப் போல் சமுதாயத்தில் உழவுத்தொழில் மற்றுமன்று, பிறதொழில் செய்பவர்கள் , பிறசமயத்தவர்களும் மழை வேண்டி ‘மழைச்சோறு ‘பெற்று வழிபடுவது இன்றும் வழக்கமாக உள்ளதைக் காணமுடிகிறது. மானுடவியலாளர் கருத்திற்கேற்ப மனித உற்பத்தியில் பெண் செழுமைக்குரியவள் என்பதற்கேற்ப, பயிர்பெருக்கத்திற்குரிய ‘நாற்றுநடுதல் ‘பணியைப் பண்டுதொட்டு பெண்களே இன்றுவரை செய்வதும் களஆய்வில் காணமுடிகிறது. வளங்களை வாரிவழங்கும் உழவுத்தொழிலில் ஏர்ப்புட்டுதல் தொடங்கி அறுவடை வரையிலான ஒவ்வோரு நிலையிலும் சடங்குகள் பின்பற்றப்படுதை களஆய்வில் காணமுடிகிறது.

## முடிவுரை

வேளாண்மைத் தொழிக்குரிய நிலத்தை காட்டெரிப்பு முறையில் உருவாக்கி மக்கள் தங்கள் உணவுத் தேவைகளைத் தன்னிறைவு செய்து கொண்டனர் என்பதை அறியமுடிகிறது. அதிகார வர்க்கம் மக்களுக்கு இன்னல்கள் விளைவித்த போது போராட்டம் மற்றும் சமதான முறையில் தங்களின் மனவுளைச்சல்களுக்குத் தீர்வு கண்டுள்ளனர், என்பதை மேற்கண்ட சான்றுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. வேளாண்மை எனும் சொல்லுகுரியப் பொருளான ‘உதவுதல்’ எனும் பொருளில் விருந்தோம்பல் செய்து தமிழர் பண்பாட்டைக் காக்கும் மரபைப் பின்பற்றி, சமகாலத்தில் நவீன வேளாண;மையைக் கையாண்டு அதில் பல்வேறு துறைசார் தொழில்களை உருவாக்கியுள்ளனர். அத்தொழில்களை ஆய்வு செய்திட ஏதுவாக இவ்வாய்வு அமைகிறது.

## References

Baktavatchala Bharathi, (2014) Ilakkiya Manudaviyal, Adaiyalam Publications, Chennai, India.

Baktavatchala Bharathi, (2015) Tamilar Manudaviyal, Adaiyalam Publications, Chennai, India.

Bharathidasan, (2010) Bharathiar Kavithagal, Uma Pathippagam, Chennai, India.

Rajanarayanan, Ki., (2016) Gopalla Grammam, annam veliyeedu, Chennai, India.

Stephen, G., (2004) ilakkiya inavaraiviyal, New Century Book House, Chennai, India.

Vaanamaamalai, N., (2007) Tamilar Panpadum Thathuvamum, New Century Book House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License